# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
# (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
## DEPOSITION OF WITNESS

OS.NO. - 20/2021

P.W.1 - லீலா

DATE - 19.11.2025

வா.சா.1 குறுக்கு விசாரணை-

1 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

2ம் பிரதிவாதி தரப்பில் -

சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பூர்வீகம் கேரளா மணப்புரம். எனது கணவர் 12 வயதில் வேலூர் வந்து உழைத்து சொத்துக்களை வாங்கினார். எனக்கு திருமணம் ஆகி 55 வருடம் ஆகிறது. எனது மகனுக்கு 44 வயது இருக்கும். பெரிய மகளுக்கு 45 வயது சின்ன மகளுக்கு 43 வயது இருக்கும். எனது மகனும் எனது கணவருடன் சேர்ந்து தான் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது மகன் பணத்தை எல்லாம் அழித்து விட்டார். தந்தையுடன் சண்டை போட்டுவிட்டு வேறு போர் வண்டியில் வேலை செய்து வந்தார். எனது கணவர் இறந்தபோது எனது மகன் தான் கடைசியாக அவருடன் இருந்தார். எனது கணவர் இறந்தபோது ரூ.40,00,000/- பணம் மற்றும் நகைகள் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் எனது மகன் புகார் கொடுத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரி. எனது மகன் மேற்படி நகைகள் ரூ.40,00,000/- பணத்தை எனது பெண்கள் எடுத்துக்கொண்டார்கள் என புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.19 20:03:05 +0530

Additional District Judge(FTC),

Vellore.